(செய்தி) வெளியீடு எண்: 942

# அரசு செய்தி வெளியீடு – 3.11.2008

இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு – இந்தியாவிலிருந்து அனுப்பப்படவிருக்கும் உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி வழங்குவது என்பதை இலங்கை அரசு தான் முடிவு செய்யும் என்று இன்று தமிழ் நாளேடு (தமிழ் ஓசை) ஒன்றில் தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தியைப் பார்த்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் – மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களுக்கும் "பேக்ஸ்" மூலம் கடிதம் அனுப்பி – அது பற்றி உடனடியாக தகுந்த விளக்கத்தை அளித்திட வேண்டுமென்றும், ஏனென்றால் மத்திய அமைச்சர் தமிழகத்திற்கு வந்த போது தெரிவித்த செய்திக்கும், இன்று காலை ஏட்டில் வந்த செய்திக்கும் பெரிய முரண்பாடு இருப்பதாகவும் – மேலும் வேண்டுமென்றே சில கட்சிகள் இந்தியாவிலிருந்து அனுப்பப் படும் நிவாரணப் பொருட்கள் முறையாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குச் சென்றடையாது என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இதற்கான விளக்கம் மிகவும் அவசியம் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். முதல் அமைச்சரின் கடிதத்தைக் கண்ட மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் சில மணி நேரத்தில் நடவடிக்கையெடுத்து, அவரது துறையின் செயலாளர் வாயிலாக தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு "பேக்ஸ்" மூலம் விளக்கம் அளித்துள்ளார்.

அந்த விளக்கத்தில் "இலங்கையின் வடக்குப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வது தொடர்பாக தமிழக முதல் அமைச்சர் வெளி உறவுத் துறை அமைச்சருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார். உண்மை நிலை

என்னவெனில் – நிவாரணப் பொருட்கள் இந்தியாவிலிருந்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதருக்கு கப்பல் மூலம் அனுப்பப்படும். அந்த நிவாரணப் பொருட்களை இலங்கையிலே உள்ள இந்தியத் தூதர் பெற்றுக் கொண்டு – பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம், ஐக்கிய நாடுகள் மன்றம் ஆகியவற்றின் மூலம் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார்" என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(I write regarding the letter from Chief Minister, Tamil Nadu to External Affairs Minister about the distribution of relief materials intended for Sri Lankan Tamils affected by the conflict in Northern Sri Lanka. The factual situation is that these materials will be shipped to the High Commission of India in Colombo who will arrange for its distribution in the affected areas through the international Committee of the Red Cross (ICRC) and the United Nations (UN).)

மிகுந்த கவலையுடனும், உருக்கத்துடனும் கவனிக்கப்பட வேண்டிய இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே உறுதி செய்யப்படாத செய்திகளை வெளியிட்டு மக்களை பீதியடையச் செய்ய வேண்டாமென்று பத்திரிகையாளர்களை தமிழக அரசு கேட்டுக் கொள்கிறது.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9